தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
மயிலாடுதுறை

அ.சா.1 நாள் 26.03.2026

| | | | |
|---|---|---|---|
| SC. No. | 132/2024 | | |
| பெயர் | அரவிந்த் | த/பெ. | அமிர்தலிங்கம் |
| வயது | 35 | தொழில் | டிரைவர் |
| கிராமம் | கோவில்பத்து | தாலுக்கா | சீர்காழி |

**(2, 3எதிரிகள் ஆஜர், 1ம் எதிரி ஆஜர் இல்லை, பி.என்.எஸ்.எஸ்.சட்டப்பிரிவு 355-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. 4ம் எதிரி ஆஜர் இல்லை.).**

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :-

நான் தற்போது கோவில்பத்து கீழ் அகனியில் வசித்து வருகிறேன். நான் கார் டிரைவராக வேலை செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். கடந்த 13.06.2019 அன்று இரவு 8.30 மணியளவில் நானும், வள்ளுவக்குடி ராஜு என்பவரும் திருவெண்காடு கோவிலுக்கு சென்றிருந்தோம். கோவிலில் சாமி கும்பிட்டுவிட்டு வீட்டிற்கு கிளம்பும்போது எனக்கு குணசீலன் என்பவர் எனக்கு போன் செய்தார். அவர் எனது மாமனார் சேகர் SI பற்றி எவ்வாறு Whattsapp-ல் போடலாம் என்று என்னிடம் கேட்டார். எனக்கும் மேற்படி சேகர் SI-க்கும் என்மீது பொய் வழக்கு போட்டது தொடர்பாக பிரச்சனை இருந்தது. நீ எங்கடா இருக்க என்று குணசீலன் என்னை கேட்டார், நான் கோவிலில் இருப்பதாக சொன்னேன். என்னை குணசீலன் கீழவீதி ஆர்ச் கிட்ட வரும்படி சொன்னார். நானும்,ராஜுவும் அங்கு சென்றோம். அப்போது நேரம் சுமார் 9.30 மணி இருக்கும். குணசீலன் என்னை பார்த்ததும் குச்சிகாரி மகனே, தேவிடியா மகனே நீ தான் அரவிந்தா என்று சொல்லி இடுப்பில் வைத்திருந்த கத்தியை எடுத்து என்னை குத்த வந்தார். நான் வலது கையால் தடுத்தபோது எனக்கு வலது மணிக்கட்டில் காயம் ஏற்பட்டது. குணசீலன் கூட வந்த ராஜேஷ் என்பவர் இரும்பு ராடால் என்னை பின் தலையில் அடித்தார். குணசீலன் கூட வந்த

CJM, MAYILADUTHURAI.

A. அரவிந்த்

அகோரமூர்த்தி என்பவர் அந்த இடத்திலிருந்த கல்லால் எனது வலது கையில் அடித்தார். ரகுவீரன் என்பவர் அந்த இடத்தில் இருந்த கல்லை எடுத்து முகத்தில் அடித்தார். நான்கு பேரும் என்னை பார்த்தபோது இத்தோடு செத்துபோடா என்று சொல்லி என்னை மாறிமாறி அடித்தார்கள். எனக்கு உடம்பு முழுவதும் காயம் ஏற்பட்டுவிட்டது. என்னை ராஜு என்பவர் சீர்காழி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக சிதம்பரம் அண்ணாமலை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்ந்தேன். நான் சிதம்பரம் அண்ணாமலை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது திருவெண்காடு போலீசார் வந்து என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். அந்த புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். எதிரிகள் என்னை தாக்கிய இரும்பு ராடை பார்த்தால் என்னால் அடையாளம் காண்பிக்க முடியும். என்னிடம் காண்பிக்கப்படும் இரும்பு ராடுதான் எதிரிகள் என்னை தாக்கிய ஆயுதம் ஆகும். அந்த இரும்பு ராடு **சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>1முதல் 3எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

என்மீது கொலை வழக்கு போன்ற பல வழக்குகள் நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரிதான். நானும், ராஜுவும் இருச்சக்கர வாகனத்தில் சென்றதாக சொல்லும் பட்சத்தில் அதன் பதிவெண் எனக்கு தெரியவில்லை. அந்த வண்டி எனக்கு உரிமையானதுதான். என் கிராமத்திற்கும் திருவெண்காடு கோவிலுக்கும் சுமார் 18கி.மீ தூரம் இருக்கும். திருவெண்காடு கோவில் இரவு 8.00 மணிக்கு மூடிவிடுவார்கள் என்று சொன்னால் சரிதான். உதவி ஆய்வாளர் சேகர் என்பவரால் புதுப்பட்டினம் காவல் நிலையத்தில் என்மீது வழக்கு பதியப்பட்டது என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்த இடத்தில் உள்ள கடைகளில் சிசிடிவி கேமரா உள்ளது என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்த பகுதி மிகவும் ஜனங்கள் நடமாட்ட உள்ள கூட்டமான பகுதி என்று சொன்னால் சம்பவம் நடந்தபோது டீ கடையில் மட்டும் ஆட்கள் இருந்தார்கள். சம்பவம் நடந்தபோது பகுதி வெளிச்சமாக இருக்கும் பகுதி என்று சொன்னால்

CJM, MAYILADUTHURAI.

அப்போது வெளிச்சம் இல்லை. சம்பவம் நடந்த சமயத்தில் எதிரிகள் நால்வரும் அங்கு இல்லை என்றும், அவர்கள் வேறு பகுதியில் வேலை செய்து வந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்தபோது என் மீது 15 வழக்குகள் சீர்காழி நீதிமன்றத்தில் உள்ளது என்றால் இல்லை. நான் மதுபோதையில் இருச்சக்கர வாகனத்திலிருந்து கீழே விழுந்தகாயத்தை எதிரிகள் காழ்புணர்ச்சிக்கொண்டு எதிரிகள் மீது புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அதனால், தான் இருச்சக்கர வாகனத்தின் பதிவெண் எனக்கு தெரியவில்லை மற்றும் காவல் துறையினரிடம் அது பற்றி சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் எதிரிகள் மீது பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அடிபட்ட உடன் எனது சித்தி சீலா, சித்தப்பா சங்கர், அண்ணன் மனோ எனக்கு அடிப்பட்ட விபரம் தெரிந்து என்னை வந்து பார்த்தார்கள். நான் அடிப்பட்டதும் மயக்கமாகிவிட்டேன். என்னுடன் ராஜு மட்டும் இருந்தார், என்னை அடிக்கும் போது பார்த்து சத்தம்போட்டுக்கொண்டிருந்தார். எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்விதமான சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> :–

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.